**செய்தி வெளியீடு எண்.403** **நாள்.30.5.2008**

**கிறித்துவ மற்றும் இஸ்லாமிய சிறுபான்மை சமுதாயத்தினருக்கு தலா 3.5 சதவீதம் இட ஒதுக்கீடு செய்து 15.9.2007 அன்று தமிழக அரசு அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்தது. அதனைச் செயல்படுத்துவதில் ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல்கள் விரைவில் களையப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்கனவே அறிவித்திருந்தார்கள்.**

**அதனடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் இன்று (30.5.2008) நடைபெற்ற கூட்டத்தில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா.வீராசாமி, மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாநில நிர்வாக சீர்திருத்தக் குழுத் தலைவர் நீதியரசர் ஏ.கே.ராஜன், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் திரு.ஆ.மு.காசிவிஸ்வநாதன், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறைச் செயலாளர் திரு. டி.எஸ்.ஸ்ரீதர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைச் செயலாளர், திரு. என். வாசுதேவன், சட்டத் துறைச் செயலாளர் திரு. எஸ்.தீனதயாளன் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

**இக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தற்போது தொகுதி நான்கு (**Group IV) **போட்டித் தேர்வின் மூலம் நடத்தப்பட்ட தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் போன்ற பணியிடங்கள் மற்றும் இதர பணியிடங்களை நிரப்புவதில் சிறுபான்மையினருக்கு உரிய 3.5 சதவீத பிரதிநிதித்துவம் கிடைக்க ஏதுவாக ஆணை பிறப்பித்துள்ளார்கள். இந்த ஆணை உடனடியாக நடைமுறைக்கு வருகிறது.**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.